## மதுராந்தகம், தாராபுரம் ஆகிய

# சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

நடைபெறவுள்ள மதுராந்தகம் (தனி), தாராபுரம் (தனி) ஆகிய சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் பணிகளை ஒருங்கிணைத்துச் செயல்பட கீழ்க்கண்ட தேர்தல் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

### மதுராந்தகம் (தனி) தொகுதி

1. **தா.மோ.அன்பரசன்** (காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர்)
2. **க.சுந்தர்** (காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர்)

### தாராபுரம் (தனி) தொகுதி

1. **மு.பெ.சாமிநாதன்** (கழகத் துணைப் பொதுச்செயலாளர்)
2. **இல.பத்மநாபன்** (திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர்)

அருகில் உள்ள கழக மாவட்டத்தினர் பொறுப்பாளர்களுடன் இணைந்து கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு அயராது பாடுபட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18.
நாள் : 11.09.2026

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

## தமிழ் அறிஞரும், பட்டிமன்ற நடுவருமான

# முனைவர் சாலமன் பாப்பையா மறைவு!

## தமிழ் இலக்கிய உலகிற்குப் பேரிழப்பு!



**மதுரை, செப். 12 -**

**தமிழ் அறிஞரும், பட்டிமன்ற நடுவருமான சாலமன் பாப்பையா அவர்கள் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்கப் பெரிதும் வருந்துகிறோம்.**

கடந்த 5ம் தேதி சிவகாசியில் நடந்த சன் டி.வி. சிறப்பு பட்டிமன்றத்தில் நடுவராக பொறுப்பேற்று நடத்தினார். 2 நாட்களாக காய்ச்சல் காரணமாக ஓய்வெடுத்து வந்த நிலையில் நேற்று காலை சாலமன் பாப்பையா அவர்கள் உயிர் பிரிந்தது.

வயது மூப்பு காரணமாக சாலமன் பாப்பையா அவர்கள் மதுரையில் இயற்கை எய்தினார். அவருக்கு வயது 90.

12,000க்கும் மேற்பட்ட பட்டிமன்றங்களை நடத்தியவர் சாலமன் பாப்பையா அவர்கள், கலகலப்பாக பட்டிமன்றங்களை நடத்துவதில் புகழ்பெற்றவர் சாலமன் பாப்பையா அவர்கள்.

அன்பு தாய்மார்களே, அருமை பெரியோர்களே, இனிய குழந்தைகளே என்றொலிக்கும் கணீர்க் குரலுக்கு சொந்தக்காரார். புராணங்கள், இலக்கியங்களை பேசிக்கொண்டிருந்த பட்டிமன்றங்களில் எளிய மக்களின் வாழ்க்கையை பேச வைத்தவர். 2021ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் பத்மஶ்ரீ விருது உள்பட ஏராளமான விருதுகளைப் பெற்றுள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடத்தும், கழகத் தலைவர் அவர்களிடத்தும் மிகுந்த அன்பு கொண்டு பழகிய பண்பாளர் அவர்.

கலைஞர் பிறந்த நாள் விழா போன்று கழகம் நடத்திடும் பல்வேறு விழாக்களிலும் பங் கேற்று உரை நிகழ்த்திய பெருமைக் குரியவர்.

குறிப்பாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் யாத்த “தொல்காப்பியப் பூங்கா” நூல் வெளியீட்டு விழா சென்னை - அண்ணா அறிவாலயம் ‘கலைஞர் அரங்கில்’ நடைபெற்றபோது - அவ்விழாவில் பங்கேற்று “தொல்காப்பியப் பூங்கா” நூலின் முதற்படியைப் பெற்றுக் கொண்டு, அந்நூல் குறித்து திறனாய்வுரை நிகழ்த்தி, அவ்விழாவிற்குப் பெருமைச் சேர்த்தார் சாலமன் பாப்பையா அவர்கள்.

எழுத்து, பேச்சு என இலக்கியத்தின் அனைத்து வடிவங்களிலும் ஆளுமைமிக்கவராக விளங்கிய சாலமன் பாப்பையா அவர்களின் மறைவு, தமிழ் இலக்கிய உலகிற்குப் பேரிழப்பு எனின் அது மிகையல்ல.

மறைந்த சாலமன் பாப்பையா அவர்களின் இறுதி ஊர்வலம் அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு இன்று (12.09.2026) பிற்பகல் மதுரை தத்தனேரி மின் மயானத்தில் தகனம் செய்யப்படுகிறது.

## தனது அரும் புதல்வர்களுள் ஒருவரைத் தமிழ்த்தாய் இழந்துவிட்டாள்!

# உலகெங்கும் வாழும் தமிழர்களின் பேரன்பைப் பெற்ற பேராசிரியர் சாலமன் பாப்பையா!

## மறைவு செய்தி அறிந்து – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



**சென்னை, செப்.12-**

**தமிழறிஞரும், பட்டிமன்ற தலைவருமான முனைவர் சாலமன் பாப்பையா அவர்கள் நேற்று (11.9.2026) இயற்கையெய்தினார் என்பதனை அறிவிக்க வருந்துகிறோம்.**

**இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், உலகெங்கும் வாழும் தமிழர்களின் பேரன்மைப் பெற்ற பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்கள் என்றும், தனது அரும்புதல்வர்களுள் ஒருவரை தமிழ்த்தாய் இழந்துவிட்டாள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.**

இது குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:-

சிரித்த முகம் சிந்தையைக் கவரும் தமிழ் மதுரை மண்ணின் மணம் ஆகியவற்றால் உலகெங்கும் வாழும் தமிழர்களின் பேரன்பைப் பெற்ற பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரும் அடைந்தேன்.

திருக்குறளுக்கு உரை கண்டவர், புறநானூற்றுக்குப் புதிய வரிசை கண்டவர், கம்பனையும் ஆய்ந்தறிந்தவர் எனப் பண்டைத் தமிழிலக்கியத்தில் எந்த அளவுக்கு விற்பன்னராகத் திகழ்ந்தாரோ, அதே அளவுக்கு எளிய மொழியில் நகைச்சுவையாகப் பேசும் திறனும் கைவரப் பெற்றவராகப் பாப்பையா அவர்கள் திகழ்ந்தார்.

பொங்கல், புத்தாண்டு உள்ளிட்ட பண்டிகை நாட்கள் பாப்பையாவின் பட்டிமன்றத்தோடுதான் தமிழர்களுக்குத் தொடங்கும் எனும் அளவுக்குத் தமிழர்களின் அன்றாட வாழ்க்கையோடு இரண்டற இயைந்துவிட்ட பெருமைக்குரியவர் பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்கள். பட்டிமன்றம் என்றாலே பாப்பையாதான் எனக் கூறும் அளவுக்குத் தமிழ்நாடு மட்டுமல்லாது, உலகின் பல நாடுகளிலும் பல்லாயிரம் பட்டிமன்றங்களுக்கு நடுவராக இருந்தவர். தற்கால மதுரையின் பெருமை மிகு அடையாளமாகவே மாறிப் போனவர். பாப்பையா பரம்பரை எனச் சொல்லத்தக்க அளவுக்குத் தன்னைப் போலவே பல பேச்சாளர்களைத் தமிழுக்குக் கொடையாகத் தந்தவர்.

தலைவர் கலைஞர் மீதும் என் மீதும் மிகுந்த அன்பைப் பொழிந்தவர் பேராசிரியர் பாப்பையா அவர்கள். கழகம் ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர் எங்கள் மீது காட்டும் அன்பில் எந்த மாற்றமும் இருந்ததில்லை. எப்போது சந்தித்தாலும் புன்னகையோடும் வாஞ்சையோடும் கரங்களைப் பற்றிக்கொள்ளும் அன்பிலான உறவை நாங்கள் கொண்டிருந்தோம்.

கடந்த ஆண்டு மே மாதம் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நான் மதுரை சென்றிருந்தபோது நடந்த மக்கள் சந்திப்பில் அவரது வீட்டு வாசலுக்கு வந்து என்னை வரவேற்றார். சில மாதங்களுக்கு முன்புதான் துணைவியாரை இழந்திருந்த பேராசிரியரிடம், “உடல்நலனைப் பார்த்துக்கொள்ளுங்கள்” என்று சொல்லிவிட்டு வந்தேன். அவர் இன்று நம்மை விட்டுப் பிரிந்ததை மனம் ஏற்க மறுக்கிறது.

தனது அரும்புதல்வர்களுள் ஒருவரைத் தமிழ்த்தாய் இழந்துவிட்டாள். பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்களை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தா ர்க்கும் மதுரை மக்களுக்கும் உலகெங்கும் வாழும் அவரது இரசிகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## 1857 சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவப் படிப்புக்கான இடங்கள் இந்தியா முழுவதும் நிரப்பப்படாமல் இருக்கின்றன!

# Zero Percentile -க்குத் தகுதி மதிப்பெண்ணைக் குறைக்க வேண்டும்!

## பிரதமருக்கு – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, செப்.12-

மதிப்புமிக்க 1857 சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவப் படிப்புக்கான இடங்கள் இந்தியா முழுவதும் நிரப்பப்படாமல் இருப்பது அதிர்ச்சியளிக்கிறது. இதில் தமிழ்நாட்டில் பணிபுரியும் அரசு மருத்துவர்களுக்கான ஒதுக்கப்பட்ட 40 இடங்களும் அடங்கும். எனவே பிரதமர் அவர்கள் உடனடியாக தலையிட்டு முந்தைய ஆண்டுகளில் செய்ததைப்போல Zero Percentile-க்குத் தகுதி மதிப்பெண்ணைக் குறைக்க வேண்டும் என்றும் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் வலியுறுத்தியுள்ளார்.

கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதள பதிவு வருமாறு:-

ஒன்றிய அரசின் பொது மருத்துவச் சேவைகள் இயக்குநரகம் (DGHS) தகுதி மதிப்பெண்ணைக் குறைக்க மறுப்பதால், மதிப்புமிக்க 1,857 சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவப் படிப்புக்கான இடங்கள் இந்தியா முழுவதும் நிரப்பப்படாமல் இருப்பது அதிர்ச்சியளிக்கிறது. இதில் தமிழ்நாட்டில் பணிபுரியும் அரசு மருத்துவர்களுக்காக ஒதுக்கப்பட்ட 40 இடங்களும் அடக்கம்.

நேற்று, தமிழ்நாடு மருத்துவ அலுவலர்கள் சங்க வழக்கில், மாண்பமை உச்சநீதிமன்றமே தகுதி மதிப்பெண்ணைக் குறைக்க அறிவுறுத்தியுள்ளது. எனவே, பிரதமர் அவர்கள் இதில் உடனடியாகத் தலையிட்டு, முந்தைய ஆண்டுகளில் செய்ததைப் போல ‘zero percentile’க்குத் தகுதி மதிப்பெண்ணைக் குறைக்க வலியுறுத்துகிறேன்.

மேலும், இடங்களை நிரப்ப இயலாமல் போகும் நிலையில், பணியில் இருக்கும் அரசு மருத்துவர்களுக்கான ஒதுக்கீட்டில் மாநில அரசுகளே அவர்களுக்கான தகுதி மதிப்பெண்ணை நிர்ணயம் செய்யவும் ஒன்றிய அரசு அனுமதிக்க வேண்டும். பொது மருத்துவம் என்பது மாநில அரசுகளின் அரசியலமைப்புக் கடமையாகும்.

மக்களுக்கு உயர்சிறப்பு மருத்துவர்களுக்கான தேவை பெரிதும் இருக்கும்போது, நம் நாட்டின் விலைமதிப்பற்ற சொத்தான மருத்துவப் படிப்புக்கான ஓர் இடம் கூட வீணாகக் கூடாது.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## மதுராந்தகம், தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல்: தி.மு.க. தலைமையிலான

# மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு ஆதித்தமிழர் கட்சி ஆதரவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினை சந்தித்து தெரிவித்தனர்!

*சென்னை, செப்.12-*

*கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களை ஆதித்தமிழர் கட்சித் தலைவர் கு.ஜக்கையன் - பொதுச் செயலாளர் விஸ்வைகுமார் - அமைப்புச் செயலாளர் திலீபன் - மாநில ஆலோசகர் விடுதலைகுமார் ஆகியோர் நேரில் சந்தித்து ஆதரவு தெரிவித்தனர்.*

*கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (11.9.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் “ஆதித்தமிழர் கட்சி”யின் தலைவர் கு.ஜக்கையன் மற்றும் பொதுச்செயலாளர் விஸ்வைகுமார் - அமைப்புச் செயலாளர் திலீபன் - மாநில ஆலோசகர் விடுதலைகுமார் ஆகியோர் நேரில் சந்தித்து, நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை இடைத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு ஆதித்தமிழர் கட்சி முழு ஆதரவு அளிப்பதாகவும், இடைத்தேர்தல் நடைபெறும் மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு அறிவிக்கப்பட்டுள்ள கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு ஆதித்தமிழர் கட்சி நிர்வாகிகள் - தோழர்கள் முழுமையாக பாடுபடுவார்கள் என தெரிவித்தனர்.*



சென்னை கிழக்கு மாவட்டம் கொளத்தூர் தொகுதிப் பகுதி, வட்டம் மறுசீரமைப்பு தொடர்பான நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் பட்மேடு நாடார் சமூக ஐக்கிய சங்கத்தில் நடைபெற்ற கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு பகுதி வட்டம் மறுசீரமைப்பு பற்றி எடுத்துக் கூறி ஆலோசனைகள் வழங்கினார். இக் கூட்டத்தில் பகுதிக் கழக செயலாளர்கள் எ.நாகராசன்.எம்.சி, ஐ சி எஃப்.வ. முரளிதரன், சி.மகேஷ் குமார்,கே சந்துரு, சரிதா மகேஷ் குமார், எஸ் தனசேகர் மா அசோக் குமார் இரா தயாளன் எம் சாக்ரடிஸ் பி.வெங்கடேசன் ஆர் காஞ்சனா பி சூரி பி. பழனி,இலா இளங்கோவன் எஸ் கே ரமேஷ் எம் தாவுத் நீ, எல் டி தாமஸ் ,எம் டி தமிழ்செல்வன்,எஸ் முருகன், எஸ் முருகன், என் பவுல்ராஜ்,பி.அதிபதி, எம் ஜே சி பாபு பி டி சி ரவி கே பி ஆதவன் மணி பி ஊமைத்துரை, பி சந்திரசேகர், கே.ஜார்ஜ்குமார்,என்.பொன்முடி,ஆர்.ராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் செயல்வீரர்கள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



மதுரையில் இயற்கை எய்திய தமிழறிஞர் பட்டிமன்ற நடுவர் பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்களின் உடலுக்கு தி.மு.க. சார்பில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் திருச்சி என்.சிவா எம்.பி. மாலை அணிவித்து மரியாதை செலுத்தி குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார். உடன் மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி, மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் எம்.எல்.ஏ., மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, தலைமை செயற்குழு உறுப்பினர் மா.ஜெயராம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் திரளாகப் பங்கேற்றனர்.